www.agaram.lk

20

0133

AL/2019/45/T-I (OLD)

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved ]

පැරණි නිර්දේශය/ பழைய பாடத்திட்டம்/ Old Syllabus

OLD

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2019 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப் பரீட்சை, 2019 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2019

05.08.2019 / 0830 – 1030

බෞද්ධ ශිෂ්ටාචාරය I
பௌத்த நாகரிகம் I
Buddhist Civilization I

45 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**அறிவுறுத்தல்கள் :**

※ **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.

※ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.

※ விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.

※ **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி** (×) இடுவதன் மூலம் காட்டுக.

**1.** புத்தர் காலத்து இந்தியாவில் நிலவிய சமய தத்துவங்களுள் வைதிக சமயங்களை வேறுபடுத்தி இனங்காண்பதற்கு மிகப் பொருத்தமான கூற்று யாது?
(1) ஈஸ்வர நிர்மாண வாதத்தையும் நியதிப் பரிணாமவாதத்தையும் ஏற்றுக் கொள்ளல்
(2) யாகத்தையும் நியதி பரிணாமவாதத்தையும் ஏற்றுக் கொள்ளல்
(3) ஈஸ்வர நிர்மாணவாதத்தையும் ஸங்ஸார ஷுத்திவாதத்தையும் ஏற்றுக்கொள்ளல்
(4) நியதி பரிமாணவாதத்தையும் கர்ம மார்க்கத்தையும் ஏற்றுக் கொள்ளல்
(5) கர்ம மார்க்கத்தையும் ஈஸ்வர நிர்மாணவாதத்தையும் ஏற்றுக் கொள்ளல்

**2.** பிராமண போதனைக்கமையவாக கணவன் இறந்த வேளை மனைவி செய்யவேண்டிய மிக முக்கிய வழக்கமாகக் கருதப்படுவது,
(1) வாழ்க்கை முழுவதுமே விவாகம் செய்துகொண்ட கணவனைப் பற்றி எண்ணிக் கொண்டு காலத்தைக் கழித்தல்.
(2) வாழ்வு உள்ளவரை மூத்த மகனின் பாதுகாப்பைப் பெற்று, கணவனுக்காக யாகங்கள், ஹோமங்கள் நடத்துதல்.
(3) கணவனின் உடல் எரியும் நெருப்பில் பாய்ந்து வாழ்க்கையை முடித்துக் கொள்ளல்.
(4) வானப்பிரஸ்த சந்நியாச ஆச்சிரம தர்மத்திற்கமைவாகச் செயற்படுதல்.
(5) ஸதி பூசை பற்றி இடைவிடாது நினைத்துக்கொண்டு காலத்தை கழித்தல்

**3.** பிராணிகளின் இறப்பின் பின் நடப்பவை, பரலோகம், நல்ல, தீய செயல்களின் பயன்களின் பிரிவுகள் என்பவை பற்றி ஆராய்ந்த புத்தர் காலத்துச் சில சமணர்கள் இது பற்றிய தீர்மானமானதொரு விடையைக் கொடுக்காதது பற்றி ஸஞ்ஜய பெல்லட்டீ புத்தரின் போதனைகளின் மூலம் தெளிவாகின்றது. அவ்வாறு விடையொன்று கொடுக்காமைக்கான காரணங்களாக நான்கு காரணங்களைப் புத்த சமயம் எடுத்துக்காட்டுகின்றது. அந்த நான்கு **காரணங்களுக்குரியதல்லாத** கூற்றினை தேர்ந்தெடுக்குக.
(1) உபாதானத்தில் உள்ள பயம் காரணமாகவும் வெறுப்புக் காரணமாகவும் விடை அளிக்காமை
(2) சம்சாரம் தொடர்பிலான பயம், வெறுப்பு என்பவற்றால் விடையளிக்காமை
(3) தவறான வார்த்தைகளால் பாவங்களைச் செய்யும் பயம், வெறுப்பு காரணமாக விடையளிக்காமை.
(4) விடையளிக்கும் வேளையில் எதிர் வினாக்கள் வினாவப்படலாம் என்று அதற்குப் பயந்ததனால் விடையளிக்காமை.
(5) அறிவின்மையாலும் கடுமையான மடைமைத்தனத்தாலும் வினாக்களுக்கு விடையளிக்க இயலாமை காரணமாக விடையளிக்காமை.

[பக். 2 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



4. புத்தர் காலத்தில் பிரசித்தமாயிருந்த மக்கலிகோஸாலரினது பிரதானமான போதனையாவது,
(1) உச்சேத பௌதிக வாதம் (2) பரம அவிஹிங்ஸா வாதம் (3) அமரா விக்கேப வாதம்
(4) அகிரிய வாதம் (5) நியதி பரிணாம வாதம்

5. புத்தர் காலத்து இந்தியாவில் நிலவிய பதினாறு பெரும் இராச்சியங்களுள் மிகக்கூடிய அமைச்சர்கள் குழுவொன்றினால் பரிபாலிக்கப்பட்டு வந்த இராச்சியமெனக் கருதப்படுவது
(1) மகத இராச்சியம் (2) கோசல இராச்சியம் (3) வஜ்ஜி இராச்சியம்
(4) மல்ல இராச்சியம் (5) குரு இராச்சியம்

6. விவசாயப் பொருளாதாரத்துக்கு முதலிடமளித்த பண்டைய இந்தியாவில் வாணிபம் சர்வதேச ரீதியில் வளர்ச்சி நிலைக்குட்பட்டிருந்ததாக எடுத்துக் காட்டக் கூடிய மிகப் பொருத்தமான ஆதாரமாவது,
(1) மட்டுப்பாதை வழியாக நடந்த வியாபாரம்
(2) புதிய நகரக் கட்டமைப்பு உண்டானமை
(3) பொருட்கள் உற்பத்தி உயர்ந்தமை
(4) ஆறுகளினூடாகப் பொருட்களைக் கொண்டு சென்றமை
(5) விவசாய உற்பத்திகளினால் சுயதேவையைப் பூர்த்தி செய்தமை

7. புத்தர் காலத்து இந்தியாவில் நிலவிய சமணமரபுகளான ஜடில, ஆஜிவக்க, அசேவக, நிகண்ட முதலான குருகுலங்களிலிருந்தும், சாக்கியபுத்திர சமணர்களிடமிருந்தும் சேர்ந்ததாயிருந்தது. இந்த சகல சமணர்களுக்கும் பொதுவான இயல்புகளைப் போன்றே ஒத்ததான இயல்புகளுமிருந்தன. இதன்படி சாக்கிய புத்திர சமணர்களுக்கு மட்டும் உரியதாயிருந்த இயல்பு (இலட்சணம்) எதுவாகும்?
(1) அலைந்து திரிந்துகொண்டு வாழ்க்கையைக் கழித்தல்.
(2) பிச்சையேற்று வாழுதல்.
(3) நிலையான வாழ்விடத்தைக் கொண்டிராமை.
(4) தலையை மழித்துக் கொண்டு தமது உடலை மறைக்கும் வகையில் ஆடை அணிதல்.
(5) ஞான மார்க்கத்தை ஏற்றுக் கொள்ளல்.

8. "புண்ணியவானான கௌதமர், கீழ்ப்பட்டு இருந்ததை மேலே கொண்டு வருவது போலவும் மூடியிருந்ததை திறந்து காட்டுவது போலவும் வழிதெரியாது நிற்பவருக்கு வழி சொல்பவர் போலவும் கண் இருந்தும் உருவத்தைக் கண்டு கொள்ளாத இருளின்போது விளக்கு ஏற்றுபவர் போலவும் பலவிதமான வழிகளில் தர்மபோதனை செய்துள்ளார்." இந்தக் கூற்று
(1) புத்தகுணம் பற்றிய வர்ணனையாகும்.
(2) சமயகுணம் (தகம் குண) பற்றிய வர்ணனையாகும்.
(3) சீடராக நியமிக்கப்பட்டவர்கள் புத்தரைப் பற்றிச் செய்த மதிப்பீடு ஒன்றாகும்.
(4) நிர்வாணம் பற்றிய அறிவைப் பெற்றவர்களின் மகிழ்ச்சிக் கூற்றாகும்.
(5) மார்க்கத்தின் பயனையடைந்தவர்கள் தமது சுயதிருப்தியை வெளிப்படுத்தும் கூற்றாகும்.

9. முதலாவது பௌத்த மகாசபையின் முடிவில் வினயபிடகத்தையும் சூத்திரபிடக ஐந்து நிகாயாக்களையும் மனப்பாடமாக்குவதன் மூலம் வளர்த்துக்கொள்வதற்காக மஹா பிக்கு அவர்களது மாணவ பரம்பரைக்கு கையளித்ததாகச் சாசன வரலாற்றில் குறிப்பிடப்படுகின்றது. அதில் தீகநிகாயவுக்குரியதான சூத்திரங்களை வாய் மூலமாக பரம்பரை வழியில் வளர்த்துச் செல்லவதற்குப் பொறுப்பளிக்கப்பட்டவர்,
(1) வண. ஸாரீபுத்தரின் சிஷ்ய பரம்பரையினர்
(2) வண. உபாலியை முதலாவதாகக் கொண்ட சிஷ்ய பரம்பரையினர்
(3) வண. மகா காஷ்யபரை முதலாகக் கொண்ட சிஷ்ய பரம்பரையினர்
(4) வண. மகா அனுருத்தவை முதலாகக் கொண்ட சிஷ்ய பரம்பரையினர்
(5) வண. ஆனந்தரை முதலாகக் கொண்ட சிஷ்ய பரம்பரையினர்.

10. புத்தர் காலத்து பிக்குணி சாஸனத்தில் பிரபல்யமான பிக்குணியான ஹேமா ரஹத்தருக்கு வழங்கப்பட்ட உயரிய பதவி யாது?
(1) சிரராத்ரக்ஞ (நீண்ட கால அனுபமுள்ள) பிக்குணிகளுள் உயரிய பதவி
(2) பிரக்ஞா ஸம்பன்ன (அறிவாற்றலுடன் கூடிய) பிக்குணிகளுள் உயரிய பதவி
(3) ஸுமதுரராக (இனிய குரலில்) அறத்தைக் கற்பிக்கும் பிக்குணிகளுள் உயரிய பதவி
(4) ஷிக்ஷாகாமீ ஒழுக்கமுடைய பிக்குணிகளுள் உயரிய பதவி
(5) சாதனையீட்டுவதில் கெட்டிக்கார பிக்குணிகளுள் உயரிய பதவி

[பக். 3 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



Agaram.LK - Keep your dreams alive!

**11.** விவாகம் செய்யும் இளைஞன் யுவதி ஆகிய இருவருள்ளும் குணதர்மங்கள் நான்கும் சமமாக இருக்குமிடத்து வெற்றிகரமானதொரு இல்வாழ்வு அமையும் என்பது நகுல மாதா, நகுல பிதா ஜோடிகளின் முன்மாதிரியான விவாக வாழ்க்கையின் மூலம் தெளிவாகின்றது. ஸமஜ்வீ சூத்திரத்தில் காட்டப்படடுள்ள அந்த நான்கு குணதர்மங்களும் யாவை?

(1) ஸத்தா, ஸீல, விரிய, பல
(2) ஸத்தா, ஸீல, விரிய, பீதி
(3) ஸத்தா, ஸீல, ஹிரி, ஒத்தப்ப
(4) ஸத்தா, ஸீல, சாக, பஜ்ஜா
(5) ஸத்தா, ஸீல, விரிய, பஜ்ஜா

**12.** பின்வரும் கூற்றுகளுள் தனிப்பட்ட தலைமைத்துவத்தைத் தெளிவுபடுத்துவதற்கு மிகப் பொருத்தமான கூற்று எது?

(1) தனது தலைக்கு தனது கையே நிழல்
(2) செய்த வினைக்கேற்றதாகவே அதன் பயனும் அமையும்
(3) தன்னைப் போன்று மற்றையவர்களையும் நினைத்து மற்றையவர்களை வதைப்படுத்தாமை
(4) (பட்டிச்ச ஸமுப்பன்னவாக) காரண காரியமாகவே எல்லாம் நிகழும்
(5) புண்ணியம் (நற்காரியம்) செய்பவர் இம்மை, மறுமை இரண்டிலுமே மகிழ்வடைவர்

**13.** இராச்சியத் தோற்றம் பற்றி அக்கஞ்ஞ சூத்திரத்திலடங்கியுள்ள போதனையின்படி பின்வரும் கூற்றுகளுள் **பிழையான** கூற்று எது?

(1) தவறு செய்தவருக்கு தண்டனை கொடுத்தல் ஆட்சியாளரின் முக்கிய கடமையாகும்.
(2) ஆட்சியாளருக்கு வரி செலுத்துவது மக்களின் கடமை
(3) ஆட்சியாளனை 'ராஜா' என்றழைப்பது பொதுமக்களின் விருப்பத்தின் பேரில் நியமிக்கப்படுவதனாலாகும்.
(4) ஆட்சியாளனிடமுள்ள பலமானது மக்களால் வழங்கப்பட்டதொன்றாகும்.
(5) சமூகத்திலுள்ள கெட்ட நடத்தைகள் அதிகரித்தமையால் ஆட்சியாளர் ஒருவர் நியமிக்கப்பட்டார்.

**14.** பௌத்த அரசியல் தத்துவத்தின்படி ஆட்சித் தந்திரம் என்பது சமூக நலனையும் மக்களின் நன்மையையும் கருத்தில் கொண்டு அர்ப்பணிப்புடன் செயற்படும் நிறுவனமாகும். அதில் எல்லா மக்களையும் சமமான மனப்பாங்குடன் நடத்த வேண்டும். அதாவது பட்சபாதம் இன்றி ஒவ்வொருவரையும் நடத்த வேண்டும். பட்சபாதமின்றி செயற்படுவதற்குப் பெரிதும் தூண்டுகின்றதான பௌத்த அரசியலின் மூலதர்மமாவது.

(1) நான்கு தீய இயல்புகளிலிருந்து விடுபட்டுச் செயற்படுதல்
(2) பஞ்சசீல பிரதிபதாவிற்கு அமைவாகச் செயற்படுதல்.
(3) தஸராஜ தர்மத்திற்கமைவாகஆட்சியை நடத்திச் செல்லல்.
(4) ஸப்த அபரிஹானிய (ஏழு அழிவுகள்) தர்மத்தைப் பின்பற்றல்.
(5) தஸ சக்வித்தித் தன்மையைக் கடைபிடித்தல்.

**15.** குற்றங்களைத் தடுக்குமிடத்து அளிக்கப்படும் தண்டனை போதுமானதாக இருப்பதில்லை என்பதும் மக்களை நல்லொழுக்கமுடையவர்களாக்குவதும் அவ்வாறே பொருளாதாரத்துறையில் மாற்றங்களை ஏற்படுத்தி பொருளாதார ரீதியாக வலுப்படுத்த வேண்டும் என்பதும் பௌத்த அரசாட்சியின் மூலதர்மம் பற்றிய ஆய்வின் மூலம் தெளிவாகின்றது. அரசாட்சி பற்றிய பௌத்த போதனைகளுள் இந்தக் கருத்து உள்ளடக்கப்பட்டுள்ளது,

(1) தஸ ராஜ தர்மங்களுள்
(2) தஸ சக்விதிவத்துள்
(3) சப்த அபரிஹானிய தர்மங்களுள்
(4) கூடதந்த சூத்திரத்திலடங்கும் அரசாட்சி பற்றிய அரசாட்சி மூலதர்மங்களுள்
(5) நான்கு தீய இயல்புகளிடமிருந்து விடுபட்டுச் செயற்படும் மூலதர்மங்களுள்

[பக். 4 ஐப் பார்க்க

agaram.lk

www.agaram.lk



16. புஜ்ஜ - பாப (புண்ணியம் - பாவம்), குஸல - அகுஸல (நல்ல - தீய), ஸாது - அஸாது (நல்லது - கெட்டது), கரணீய - அகரணீய (செய்யவேண்டியது - செய்யக்கூடாதது) முதலான தனிப்பட்ட ஒருவரின் அறிவுடன் கூடிய செயல்களைத் தீர்மானிக்கும் விடயத்தில் அம்பலட்டிகராஹுலோவத சூத்திரம் வெளிப்படுத்தும் நிர்ணயமாவது யாது?
(1) லோப, தோஸ, மோஹ, சேதனா என்பவற்றை முதலாகக் கொண்ட செயல் அகுஸல செயல்களாவதுடன் அலோப, அதோஸ, அமோக ஆகியவற்றுடன் கூடிய செயல்கள் குஸல கர்மங்களாகும்.
(2) எந்த ஒரு செயலினது தீய விளைவுகளை பிற்போட வேண்டி ஏற்படின் அது அகுஸல செயலாகும் எந்தவொரு செயலினதும் தீய விளைவுகளை பிற்போடுவதற்கான (தள்ளிப்போடுவதற்கான) காரணம் இல்லையாயின் அது குஸல செயலாகும்.
(3) தன்னுடன் ஒப்பிட்டுப் பார்த்து பிறரைக் கொல்லக் கூடாது.
(4) தன்னை உலகத்தினதும் தர்மத்தினதும் அதிகாரியாக நினைத்துக் கொண்டு நல்லது, கெட்டதைத் தீர்மனிக்க வேண்டும்.
(5) தனக்கும் மற்றவனுக்குமான இரண்டு பக்கங்களுக்கும் நல்லதல்லாத செயல்கள் தீய செயல்கள் என்றும் நன்மையான செயல்கள் நற்செயல்களென்றும் தீர்மானித்தல் வேண்டும்.

17. தஸ பிங் (பத்து நற்காரியங்கள்) செயற்பாடுகளில் பேசப்படும் கௌரவத்தைப் பெருமைப்படுத்துதலை ........................................ என்றழைப்பர்.
(1) வெய்யாவச்ச (2) அபசாயன (3) பத்திதான
(4) உபட்டான (5) பத்தானுமோதனா

18. தஸ அகுஸலங்களுள் வரும் ‘அபிஜ்ஞா’ அல்லது ‘அபித்யா’ என்பதன் கருத்து யாது?
(1) அவித்யாவ (அறியாமை) (2) குரோதம் (3) அதிக உலோபத்தனம்
(4) வெட்கமின்மை (5) குஸீதகம (சோம்பல்)

19. சூழல் பாதுகாப்பு விடயத்தில் புத்த சமயம் எவ்வளவு தூரம் கவனம் செலுத்துகின்றது என்பதை சூத்திர பிடகத்திலும் வினய பிடகத்திலும் வரும் பல வித செய்திகள் தெளிவுபடுத்துகின்றன. மரம் நடுதல், பூந்தோட்டம் அமைத்தல், மரக்குற்றிப் பாலம் அமைத்தல், தாகசாலை அமைத்தல், குளம் கட்டுதல், இரவும் பகலும் புண்ணியத்தை வளர்க்கும் புண்ணிய செயல்கள் என்றவாறு காட்டப்பட்டிருத்தல் இதற்கு எடுத்துக் கூறக்கூடிய உதாரணங்களாகும். இது பற்றிய போதனை உள்ளடக்கப்பட்டிருப்பது
(1) ஸிங்ஸபா சூத்திரம் (2) மஹா பரிநிப்பான சூத்திரம் (3) வனரோப சூத்திரம்
(4) மெத்த சூத்திரம் (5) அரியபரியெஸன சூத்திரம்

20. செல்வத்தைச் சம்பாதித்தலும் பொருட்களைப் பாதுகாப்பதும் திருப்தியானதொரு இல்லற வாழ்க்கைக்கு மிகத் தேவையானதொன்றாகும். அற வழியில் சம்பாதித்த செல்வத்தை செலவு செய்யும்போது எப்படிச் செலவு செய்ய வேண்டும் என புத்த மதம் பயன்பாட்டுக் கொள்கையொன்றை அறிமுகப்படுத்துகின்றது. இந்த பயன்பாட்டுக் கொள்கைக்கு **ஏற்றதல்லாத** விடயம் எதுவாகும்?
(1) அகதிதொ (2) அமுச்ஜிதொ (3) அனஜ்ஞாபன்னோ
(4) ஆதீனவதஸ்ஸாவி (5) ஸதிமதொ

21. செல்வத்தை ஈட்டும்போது எப்போதும் அறவழியிலமைய வேண்டுமென்றும் தவறான வழியில் செல்லலாகாது எனவும் புத்தமதம் வலியுறுத்துகின்றது. இலஞ்சம், ஊழல், வஞ்சனை, அறவழி தவறிய வியாபாரம் முதலான முறையற்ற வகையில் பணம் ஈட்டுதல் கூடாது அதற்கமைவான பணமீட்டலின் பல முறையற்ற வழிகளுள் ‘உக்கோடன’ என்பது
(1) தவறான அளவீடு (2) தவறாக நிறுத்தல் (3) இலஞ்சம் பெறுதல்
(4) கொள்ளையடித்தல் (5) ஏமாற்றுதல்

22. வறுமையனுபவித்தல், காமவயப்படும் இல்லறத்தானுக்கு துக்கமாகும் என்று கற்பிக்கும் புத்தசமயம் பொருளாதாரச் செழிப்பு இல்வாழ்வுக்கு மிகத் தேவையானதொன்று எனத் தெரிவிக்கின்றது. இந்த பொருளாதாரச் செழிப்பினை தெளிவுபடுத்துவதற்கு மிகவும் பொருத்தமான பரிபாஷை எதுவாகும்?
(1) உட்டான ஸம்பதா (2) ஸமஜ்விகிதா (3) போகசுகம்
(4) அத்தீ ஸுக (5) அணன ஸுக

[பக். 5 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



23. புத்த சமயம், 'பஞ்சவலி சங்கல்பம்' என்பதனால் எதனை விளக்குகின்றது?
(1) பணம் சம்பாதித்தல் தொடர்பிலான முறை
(2) பணத்தைப் பாதுகாத்தல் தொடர்பிலான முறை
(3) பணத்தை அனுபவித்தல் தொடர்பிலான முறை
(4) பண அழிவு தொடர்பிலான போதனை
(5) பணத்தை முதலீடு செய்தல் தொடர்பிலான அறிவுறுத்தல்

24. ஆர்ய வினயத்தில் மேற்குத் திசையை வணங்குதல் என்பதன் மூலம் அறிமுகப்படுத்தியிருப்பது...
(1) பெற்றோர் (2) மனைவி, மக்கள் (3) நண்பர்கள்
(4) ஆசிரியர்கள் (5) ஆண், பெண் வேலையாட்கள்

25. புத்தர் சிஷ்ய, சிஷ்யைகளின் புத்தி மட்டம், மன நிலை முதலியவற்றைக் கவனத்திற் கொண்டு அவரவரின் கெட்டித்தனத்திற்கேற்ற வகையில் போதனை செய்துள்ளார். அப்போது அவர் சீடர்களின் வினாக்களுக்கு விடையளிக்கப் பயன்படுத்திய முறைகளுள் ஒன்றான 'ஏகங்ஸ வ்யாகரணிய' என்பதனால் கருதப்படுவது,
(1) வினாக்களைப் பகுப்பாய்வு செய்து விடையளித்தல்
(2) வினாக்களுக்கு நேராக விடையளித்தல்
(3) மறு கேள்விகளைக் கேட்பதன் மூலம் விடையளித்தல்
(4) ஒரு பகுதியை மட்டும் கவனித்து விடையளித்தல்
(5) வினாக்களுக்கு எவ்வித விடையும் அளிக்காது ஒரு பக்கத்தில் போடல்

26. புத்தர், பவித்த (துறவு), உபஸம்பதா ஆகியவை தொடர்பில் பல நியமங்களை ஏற்படுத்தியுள்ளார். அதற்கான காரணமாவது,
(1) அரஹத்தர்களின் கோரிக்கை (2) பிக்குணிகளின் கோரிக்கை
(3) சமகால சமணர்களின் கோரிக்கை (4) சமகால சமூகத்தின் கோரிக்கை
(5) புத்தரின் விருப்பம்

27. மனிதக் கொலையினால் கடும் துக்கத்திற்கும் பச்சாத்தாபத்திற்கும் உட்பட்ட அசோக மன்னன் திக்விஜயத்தைப் புறந்தள்ளிவிட்டு தம்ம வழிக்கொள்ளையைப் பின்பற்றுவதற்கு முற்பட்டார் எனக் குறிப்பிடுவது,
(1) கால்ஸிகிரி கல்வெட்டு (2) சாஞ்சி கல்வெட்டு (3) ஸாராநாத் கல்வெட்டு
(4) பாபிரு கல்வெட்டு (5) கிரிநார் கல்வெட்டு

28. முதல் அறுபது ரஹத்தர்களை நோக்கி தொடக்கம் மத்தி (நடு) முடிவு ஆகியவற்றில் நன்மையானதும் அர்த்தமுடையதும் பரிபூரணமானதுமான பிரம்மச்சரியத்தைப் பற்றி எடுத்துக் கூறு' என்று கூறிய புத்தர் உருவல மாகாணத்திற்குச் சென்று அங்கு தம்ம போதனை நிகழ்த்தினார் என்று பௌத்த இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரதிபலனானது,
(1) யசகுல மகன் புத்த சமயத்தைத் தழுவினார்.
(2) பத்தவக்கிய குமாரர்கள் புத்த சமயத்தை தழுவினர்.
(3) வாரணாஸி செட்டி மும்மணிகளைச் சரணடைந்தார்.
(4) மூன்று ஜடில சகோதரர்கள் புத்த சமயத்தைத் தழுவினர்.
(5) கவம்பதியின் குலமகன் புத்த சமயத்தைத் தழுவினார்.

29. "சரத பிக்கவெ சாரிகங்" எனும் போதனையில் உள்ளடங்கும் 'மா ஏகென த்வே அகமித்த" எனும் கூற்றின் கருத்தினைக் காட்டுவதாகக் கருதக் கூடியதாயிருப்பது,
(1) மட்டுப்படுத்தப்பட்ட பௌதிக வளங்களிலிருந்து மிக உயர்ந்த பயனைப் பெறுதல்.
(2) மட்டுப்படுத்தப்பட்ட மனித வளங்களிலிருந்து மிக உயரிய பயனைப் பெறுதல்.
(3) பொது மக்களுக்கு மிகக் குறைந்த பாரத்தைக் கொடுத்து உணவைப் பெறுதல்.
(4) வரையறுக்கப்பட்ட காலத்தில் மிக உயரிய பயனைப் பெறுதல்.
(5) சஞ்சரித்துத் திரியும் வாழ்க்கை அல்லாது துறவு வாழ்க்கை இல்லை என்பதை நிருபித்தல்.

[பக். 6 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

**30.** பல நோக்கங்களையும், இலக்குகளையும் குறிக்கோளாகக் கொண்டு இந்தியாவில் நடாத்தப்பட்ட மூவகை தேரவாத மகாசபைகளுள் மூன்றாவது பௌத்த மகாசபையின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட பிரதான இலக்கு
(1) தர்ம விநயத்தைப் பாதுகாப்பதற்கு பாணக குழுவினரை நியமித்தல்.
(2) தர்ம விநயத்தை ஒன்றாக்குதல்.
(3) நிகாய பேதம் உண்டாவதைத் தடுத்தல்
(4) ஒன்பது நாடுகளில் தர்மத்தைப் பரவச் செய்தல்
(5) புத்த சமயத்தைத் தூய்மைப்படுத்தி பாதுகாப்பாக வைத்தல்

**31.** இரண்டாம் அசோகன் எனப் பிரசித்திப் பெற்ற கணிஷ்க பேரரசன் புத்த சமய முன்னேற்றத்திற்காக ஆற்றிய மிக விஷேசமான செயலாகக் கூறக்கூடியது,
(1) விபாஷா நூல்களை ஆக்குவித்தமை
(2) பாணக பரம்பரையினரை உருவாக்கியமை
(3) ஸத்தர்ம புண்டரீக சூத்திர நூலை ஆக்குவித்தமை
(4) மஹா பிரஞா பாரமிதா நூலை ஆக்குவித்தமை
(5) ஸாதனமாலா நூலை ஆக்குவித்தமை

**32.** புராதன இந்தியாவில் புகழ் வாய்ந்த கல்வி நிறுவனமான விக்ரமசிலா பல்கலைக்கழகத்தின் வித்தியா மண்டபத்தின் பொறுப்பிலிருந்த துவார பண்டிதர்களின் முக்கிய செயற்பாடாயிருந்தது,
(1) அனுமதிப் பரீட்சையின் மூலம் மாணவர்களைத் தெரிவுசெய்தல்.
(2) பாடத்திட்டங்களைத் தயாரித்தல்.
(3) நிர்வாகச் செயற்பாடுகளை வழிநடத்தல்.
(4) ஒழுக்கச் செயற்பாடுகளை நடத்திச் செல்லல்
(5) நுழைவு வாயில்களில் பாதுகாப்புக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

**33.** மகிந்தன் வருகைக்கு முன்னர் இலங்கையில் இந்நாட்டு சமயங்களும் வேறு நாடுகளிலிருந்து வந்து சேர்ந்த சமயங்களும் நிலவியதாக ஆதாரங்கள் கிடைத்துள்ளன. இலங்கைத் தீவில் பிரபல்யமான ஜோதி, கிரி, கும்பண்ட ஆகிய நபர்கள் வேறு நாடுகளிலிருந்து கொண்டு வந்த சமய மரபினை நிறுவினார்கள் என நிருபிக்கப்பட்டுள்ளன. அத்தகைய சமய மரபு யாது?
(1) ஆஜீவக (2) பரிபிராஜக (3) ஜைன (4) பிராஹ்மன (5) அசேலக

**34.** இங்கையில் புத்த சமயம் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் மகிந்த அரஹத் இரண்டாம் நாளன்று அரசமாளிகைப் பெண்களுக்கு ........................................................ எனும் கருப்பொருளில் சமயத்தைப் போதித்தார்
(1) விமானவத்து, பேதவத்து (2) அக்கிக்கன்தோபம சூத்திரம் (3) தேவதூத சூத்திரம்
(4) சுல்லஹத்தீபதோபம சூத்திரம் (5) பால பண்டித சூத்திரம்

**35.** “மஹா ராஜாவே! சாசனமோ தாபிக்கப்பட்டுவிட்டது. ஆயினும் வேரூன்றவில்லை” இந்தக் கூற்றின் மூலம் இலங்கை மண்ணில் புத்த சாசனத்தை நிலைநிறுத்த வேண்டுமென்ற மகிந்தனின் அபிலாசை வெளிப்பாடாகின்றது. இந்த நோக்கத்தை நிறைவு செய்வதற்கான முதலாவது நடவடிக்கையாக அவரால் சிபார்சு செய்யப்பட்டது.
(1) பிக்குணி சாசனம் அமைக்கப்பட வேண்டும் என்பது
(2) ஒவ்வொரு யொதுனதவுள்ளும் சைத்தியங்களை அமைக்க வேண்டுமென்பது.
(3) பௌத்த மகாசபை நடத்தப்பட வேண்டுமென்று
(4) இந்நாட்டவர் ஒருவர் துறவியாக தர்ம விநயங்களைக் கற்றுப் போதிக்க வேண்டுமென்பது
(5) நாடு முழுவதும் தர்மத்தை பரப்ப வேண்டுமென்பது

**36.** பௌத்தத்திற்கு முற்பட்ட இலங்கையில் வணக்கத்திற்குரியதாயிருந்த பல தெய்வங்களுள் வேட்டையாடலுக்கு அதிபதி தெய்வம் என அறிஞர்கள் ........................................ தெய்வத்தை இனங்கண்டுள்ளனர்.
(1) வ்யாத தேவ (2) புரதேவ (3) கம்மாரதேவ
(4) வெஸ்ஸவண தேவ (5) ஸுமனதேவ

[பக். 7 ஐப் பார்க்க

agaram.lk

www.agaram.lk



**37.** பின்வரும் கூற்றுகளில் **தவறான** கூற்றினைத் தேர்ந்தெடுக்குக.
(1) பிக்குணி சங்கமித்தையை அழைப்பதற்காக அரிட்டகுமாரரைத் தலைமையாகக்கொண்ட பிரதான தூதுக்குழுவொன்று இந்தியாவுக்குப் புறப்பட்டது.
(2) துட்டகைமுனு மன்னனால் காலப்பாஸாத கட்டப்பட்டு சாசனத்திற்கு வழங்கப்பட்டது.
(3) கஷ்ட நிலைக்குட்பட்டிருந்த வலகம்பா மன்னனுக்கு வண குப்பிகல மகா திஸ்ஸ உதவினார்.
(4) தேவநம்பியதிஸ்ஸ மன்னனால் மிகிந்தலை மலையில் அறுபத்தெட்டு குகைகள் கட்டப்பட்டு பிக்குகளுக்கு வழங்கப்பட்டது.
(5) அபயகிரி விகாரையின் பயன்பாட்டிற்காக கஜபாகு மன்னனால் காமினிதிஸ்ஸ குளம் நிர்மாணிக்கப்பட்டது.

**38.** “இலங்கையினது மன்னன் பௌத்தனாக மட்டுமின்றி போதிசத்துவராகவும் இருத்தல் வேண்டும்” எனும் கூற்று இடம்பெற்றுள்ள கல்வெட்டு எந்த மன்னனால் நிறுவப்பட்டது?
(1) நிஸங்கமல்லன் (2) நான்காம் மிகிந்து (3) இரண்டாம் உதயன்
(4) முதலாம் விஜயபாகு (5) மஹா பராக்கிரமபாகு

**39.** பின்வரும் கூற்றுகளுள் அபயகிரி விகாரை தொடர்பான மிகவும் சரியான கூற்று எது?
(1) பாளி உரை எழுதும்போது முதன்மையாயிருந்தது அபயகிரியாகும்.
(2) மஹா ஸும்ம பிக்கு பிரசித்தமான அபயகிரி பிக்கு ஆவார்.
(3) விசுத்தி மார்க்கம் அபயகிரியைச் சேர்ந்த மூலாதாரமாகும்.
(4) ரத்ன பிரஸாதம் அபயகிரியைச் சேர்ந்த மாளிகையாகும்.
(5) கோதாபய மன்னன் அபயகிரிக்கு விசுவாசமான ஆட்சியாளனாவார்.

**40.** தற்காலிகத் துறவு தாய்லாந்தில் ஜனரஞ்சகமானதொரு பௌத்த கலாச்சார அங்கமாகும். சகல ஆண்களும் தமது வாழ்நாளில் எப்போதாவது ஒரு காலப்பகுதியினுள் துறவு பூண்டிருத்தல் வாழ்வில் பலவகையான குறிக்கோள்களை வெற்றிக் கொள்வதற்கு ஏதுவாகின்றது என்பது தாய்லாந்து நாட்டு மக்களின் நம்பிக்கையாகும். கீழே குறிக்கப்படுவது தற்காலிக தாய்லாந்து துறவிகளின் குறிக்கோள் பற்றிய நான்கு கூற்றுகளாகும்.
A - துறவு பூணல் விவாகத்திற்கான தகைமையொன்றாகும்.
B - தொழில் வாய்ப்புப் பெறுவதற்கானதொரு தகைமையாகும்.
C - நற்பிறப்பிற்குச் சுருக்கமான வழியாகும்.
D - போதிஸத்துவராவதற்கு இன்றியமையாததொன்றாகும்.
மேற்குறித்த கூற்றுகளுள் தாய்லாந்து துறவி எதிர்பார்த்திருக்கும் குறிக்கோள்களைக் காட்டுவதற்கு மிகப் பொருத்தமான இரண்டு கூற்றுக்களாவன,
(1) A யும் B யும் (2) A யும் C யும் (3) A யும் D யும் (4) B யும் C யும் (5) B யும் D யும்

**41.** தாய்லாந்தில் புத்தசமயம் பரவல் தொடர்பாக பின்வரும் கூற்றுகளுள் **தவறான** கூற்று எது?
(1) கி.மு. 329 இல் நகொம் பதொம் நகரையண்டி தேரவாத புத்தசமயம் பரவிற்று.
(2) கி.பி. 700 இல் பலம்பான் மன்னனின் ஆதரவினால் மஹாயான புத்தசமயம் பரவிற்று.
(3) கி.பி. 11 வது நூற்றாண்டில் பர்மா ஆட்சியாளராகிய அனௌரத மன்னனின் ஆதரவினால் புத்தசமயம் பரவிற்று.
(4) கி.பி. 1361 இல் ஸ்ரீ சூர்யவம்சம் ராம மஹாதார்மிக மன்னனின் ஆதரவினால் இலங்கையைச் சேர்ந்த பிக்குகளின் மூலம் புத்தசமயம் பரவிற்று.
(5) கி.பி. ஏழாவது நூற்றாண்டில் த்வாரவதீ இராச்சியத்திலிருந்து சீனாவிற்கு புத்தசமயம் பரவிற்று.

**42.** சீனாவிற்கும் இலங்கைக்குமிடையே பழங்காலத்திலிருந்தே சமய, கலாசார உறவுகள் நிலவிற்று. அத்தகைய உறவினை நிரூபிக்கும் வகையில் இலங்கையரிடமிருந்தும் பங்களிப்புக் கிடைத்தது. அதன்படி சீனாவில் புத்தசமயத்தின் முன்னேற்றத்துக்கு இலங்கைப் பெண்களினால் செய்யப்பட்ட நன்மைகளை வெளிப்படுத்தும் பிரதான உதாரணமாக அமைவது,
(1) பௌத்த சங்கேதங்களும் (அடையாளங்களும்) பூசைத் திரவியங்களும் இலங்கைப் பெண்களின் மூலம் கிடைத்தமை
(2) பௌத்த வெகெர விகாரையைக் கட்டும்போது இலங்கைப் பெண்களின் பங்களிப்புக் கிடைத்தமை
(3) திரிபிடக நூலை மொழி பெயர்க்கும்போது இலங்கைப் பெண்களின் பங்களிப்பு கிடைத்தமை
(4) பிக்குணி சாசனத்தை நிறுவும்போது இலங்கைப் பெண்களின் பங்களிப்பு கிடைத்தமை
(5) புத்தசமயத்தை அறிமுகப்படுத்தும்போது இலங்கைப் பெண்கள் முன்னணி வகித்தமை

[பக். 8 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



**43.** ஸென் மரபுப் போதனையின்படி முறைப்படியான அல்லது திடீர் புத்தத்துவத்தை குறிப்பதற்குப் பயன்படும் பரிபாஷைச் சொல் எது?
(1) ஸதொரி (2) ஸஸென் (zasen) (3) பொன்
(4) ஸோதோ (5) கோ ஆன்

**44.** கி.பி. ஆறாம் நூற்றாண்டில் ஜப்பானில் கிம்மெய் எனும் சக்கரவர்த்தி காலத்தில் கொரியாவின் குதர இராச்சியத்தைக் கடந்து யப்பானுக்கு புத்த சமயம் வந்தது என்று மூலாதாரங்களில் குறிப்பிடப்படுகின்றது. இதன்படி யப்பானுக்கு புத்தமதம் வருவதற்கான காரணமாவது,
(1) அரசியல் தொடர்பு
(2) சமயத் தொடர்பு
(3) விவாகத் தொடர்பு
(4) வியாபாரக் கொடுக்கல் வாங்கல்களின் விளைவு
(5) இந்தியாவின் சமயப்பணி இயக்கமாகும்.

**45.** தொல்லியல் சார்ந்த கருத்துப்படி புத்தரின் உருவம் மனிதவடிவில் அமைக்கப்பட்டுள்ளது கி.மு. முதலாம் நூற்றாண்டிலோ அல்லது கி.பி. முதலாம் நூற்றாண்டிலோ ஆகும். புத்த உருவம் முதன்முதலில் கந்தார நாட்டில் அமைக்கப்பட்டதென்பதும் மதுரா நாட்டில் அமைக்கப்பட்டதென்பதுமாக அறிஞர்களின் கருத்துக்கள் நிலவுகின்றன. அதற்கமைவாக முதன் முதலில் புத்தரின் உருவம் மதுராவில் நிர்மாணிக்கப்பட்டதென்று கூறியிருப்பவர்,
(1) ஆனந்த குமாரசுவாமி அவர்கள் (2) பர்சி பிரவுன் அவர்கள்
(3) புஷே அவர்கள் (4) பரணவிதான அவர்கள்
(5) வின்ஸன்ட் ஸ்மித் அவர்கள்

**46.** கந்தாரத்திலும் மதுராவிலும் நிர்மாணிக்கப்பட்ட புத்தர்சிலைகளின் தனித்துவமான இயல்புகள் (லட்சணங்கள்) பல கீழே காட்டப்படுகின்றன.
A - இயல்பான தலைமயிர்
B - சாக்கிய சிங்க லீலை
C - சுருளும் தன்மையுள்ள தலைமயிர்
D - அரைவாசி மூடிய இரு கண்கள்
மேற்சொன்ன கூற்றுகளுள் மதுரா புத்தர்சிலையில் காணப்படும் தனித்துவமான இரண்டு இயல்புகளைத் தேர்ந்தெடுக்குக.
(1) A யும் B யும் (2) A யும் C யும் (3) A யும் D யும் (4) B யும் C யும் (5) B யும் D யும்

**47.** சிலை வடிப்புக் கலையின்படி 'ஆஸன' என்பது அமருவதற்கு பயன்படுத்தப்படும் ஆதாரம் அல்லாது அமரும்போது இரண்டு கால்களையும் வைத்துக்கொள்ளும் (விலாசம்) முறைமையாகும். அதன்படி இலங்கை புத்தர் சிலைகளுள் 'பத்ராஸன'த்தைச் சுட்டும் சிலையொன்றாக இனங்காணப்பட்டிருப்பது.
(1) தொலுவில சிலை
(2) கல் விகாரையின் வித்யாதர குகையிலுள்ள சிலை
(3) மஹமெவ்னாவில் ஸமாதி சிலை
(4) அம்பலாந்தொட்ட ரிதியகம விகார பூமியில் கண்டெடுக்கப்பட்ட சிலை
(5) பன்குலிய அசோகாராமய சிலை

**48.** தொல்பொருளியல் கருத்துப்படி இலங்கைத் தீவின் முதலாவது தூபியாகக் கருதப்படும் தூபாராமவில் வைக்கப்பட்டிருந்ததாகக் கருதப்படுவது புத்தரினது,
(1) இடது தாடை தாது (2) வலது தாடை தாது (3) கழுத்து தாது
(4) நெற்றி தாது (5) இடைப்பட்டி தாது

**49.** சிங்கள பௌத்த இலக்கிய ஆக்கத்தின்போது இலங்கையைச் சார்ந்த இலக்கியக்காரர்கள் பல ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளார்கள் என்பதனைச் சிங்கள இலக்கியங்கள் மூலம் வெளிப்படுத்தி நிற்கின்றன. இலங்கையரது கிராம வாழ்க்கையை விபரிக்கும் ஒரு சிங்கள இலக்கிய நூலான சத்தர்ம ரத்னாவலிக்கு மூலமாகவுள்ள ஆக்கமாவது,
(1) ஜாதகட்டகதா (2) தம்மபதட்டகதா (3) ரஸவாஹினி
(4) சத்தர்மாலங்கார (5) தம்பியா அடுவா கடபத

**50.** தம்பதெனியா, கோட்டே காலங்களில் ஆக்கப்பட்ட பல கத்ய - பத்ய (உரைநடை - செய்யுள்) ஆக்கங்கள் புத்தகுணங்களை வர்ணிக்கும் நோக்குடன் ஆக்கப்பட்டவை என்பது வெளிப்படை. அதன்படி தம்பதெனிய காலத்தில் ஆக்கம் பெற்ற பூஜாவலி புத்தரின் எந்தக் குண இயல்பினை விபரிக்கின்றது.
(1) சம்மா சம்புத்த குணம் (2) புரிஸதம்ம ஸாரதி குணம் (3) அரஹங் குணம்
(4) பகவா குணம் (5) ஸத்தாதேவ மனுஸ்ஸானங் குணம்

***

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk
agaram.lk

www.agaram.lk



AL/2019/45/T-II (OLD)

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

පැරණි නිර්දේශය/ பழைய பாடத்திட்டம்/ Old Syllabus

OLD

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2019 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2019 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2019

බෞද්ධ ශිෂ්ටාචාරය II
பௌத்த நாகரிகம் II
Buddhist Civilization II

45 T II

06.08.2019 / 0830 – 1140

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

* **பகுதி I** இலிருந்து எவையேனும் **இரண்டு** வினாக்களையும், **பகுதி II** இலிருந்து எவையேனும் **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.
* ஒவ்வொரு வினாவுக்கும் **20** புள்ளிகள் உரித்தாகும்.

## பகுதி I

**1.** (i) வானப்பிரஸ்த ஆச்சிரமத்திற்குரியதான செயற்பாடுகளைச் சுருக்கமாக எடுத்துக்காட்டுக.

(ii) மனித சமூகத்தின் ஒற்றுமையை உறுதிப்படுத்தும் விடயத்தில் புத்தசமயம் முன்வைக்கும் உயிரியல் ரீதியான காரணங்களை எடுத்துக் காட்டுக.

(iii) பூரணகஸ்ஸப போதனையாளரின் அகிரியாவாதத்தினை எடுத்துக் காட்டுக.

(iv) அகிரியாவாதம் பற்றிய புத்தசமய எண்ணப்பாட்டினைச் சுருக்கமாக எடுத்துக் காட்டுக.

(v) புத்தர் காலத்து இந்தியாவில் விவசாய வாழ்க்கை முறை நடைமுறையில் இருந்ததனை உறுதிப்படுத்தும் ஆதாரங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக.

**2.** (i) புத்தரிடமிருந்த மஹாகருணா குணம் பற்றிச் சுருக்கமாக விளக்குக.

(ii) வினாக்களுக்கு விடையளிப்பதற்காக புத்தர் பயன்படுத்திய **நான்கு** விதமான வழிமுறைகளைச் சுருக்கமாக அறிமுகப்படுத்துக.

(iii) தாதீ எனும் புத்த குணத்திலிருந்து சிஷ்யன் பெற்றுக் கொள்ளக் கூடிய அறிவுரைகளைச் சுருக்கமாக எடுத்துக் காட்டுக.

(iv) புத்தரின் சமயப் பொறுமையை வெளிப்படுத்தும் **இரண்டு** சந்தர்ப்பங்களை விபரிக்குக.

(v) சமகாலத்து சமூகத்தினுள் புத்தர் பெருமான் மதிப்பீட்டிற்குட்படுத்தப்பட்ட விதத்தை **இரண்டு** உதாரணங்களுடன் விளக்குக.

**3.** (i) புத்தர் காலத்து இந்தியாவில் நிலவிய **பதினாறு** இராச்சியங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

(ii) சமஷ்டி ஆட்சி முறைமையின் அடிப்படை இயல்புகளை விளக்குக.

(iii) 'தஸ சக்விதிவத்'தைப் பற்றி எடுத்துக் கூறுக.

(iv) 'சதர அகதி' என்பதைச் சுருக்கமாக அறிமுகப்படுத்துக.

(v) சமூக பரிமாண வளர்ச்சியில் அரச ஆட்சியாளர் ஒருவரின் தேவை ஏற்படும் வகையினை மூலாதாரங்களின் அடிப்படையில் எடுத்துக் காட்டுக.

[பக். 2 ஐப் பார்க்க

agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk



## பகுதி II

**4.** (i) நல்ல, கெட்ட செயல்களைத் தீர்மானிக்கும் விடயத்தில் புத்தசமயம் ஏற்றுக்கொண்டுள்ள நிர்ணயங்களை எடுத்துக் காட்டுக.

(ii) புத்தசமயத்திற்கு அமைவாக நம்பிக்கைக்கும் பக்திக்கும் இடையிலான வேறுபாட்டினைத் தெளிவுபடுத்துக.

(iii) தனியாள் மற்றும் சமூக அபிவிருத்தியைப் பொறுத்த வரையில் பஞ்சசீல நடைமுறையை எவ்வாறு பயன்படுத்த முடியும் என்பதனை எடுத்துக் காட்டுக.

(iv) பௌதிக வளங்களை முகாமைப்படுத்துதல் பற்றிய பௌத்த போதனையை உதாரணங்கள் மூலம் விளக்குக.

**5.** (i) "அழகியலை ரசிப்பதற்கு ஆசையைத் துறப்பது ஒரு தடையாகாது" ஆராய்க.

(ii) 'பஸ்கம் ஸுவ விந்தீம' (தான் நுகரும் இன்பம்) பற்றிய புத்தசமயக் கருத்தினை சாதாரண பௌத்த நடைமுறையை ஆதாரமாகக் கொண்டு விபரிக்குக.

(iii) தனிப்பட்டவர் அறவழியில் ஈட்டிய செல்வத்தை அர்த்தமுள்ள வகையில் எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதனை பௌத்த போதனையின் அடிப்படையில் விளக்குக.

(iv) செல்வ அழிவிற்கான கதவுகளை அடைத்தல் எவ்வாறு பொருளாதாரச் செழிப்பிற்குக் காரணமாகின்றது என்பதனை எடுத்துக்காட்டுக.

**6.** (i) "உபஸம்பதா முறையானது சமகாலத் தேவையின் அடிப்படையில் வளர்ச்சியடைந்தது" ஆராய்க.

(ii) பௌத்த மகாசபை ஒன்றினை நடத்த வேண்டிய தேவை புத்தர் வாழ்ந்த காலத்திலேயே ஏற்பட்டுவிட்டதா என்பதை விளக்குக.

(iii) முதலாவது பௌத்த மகாசபையில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தர்ம - விநயத்தைப் பாதுகாப்பதற்கு எவ்வாறு காரணமாயின என்பது பற்றிக் கருத்துரை தருக.

(iv) கணிஷ்க மன்னனின் புத்தசமயப் பணியினை மதிப்பிடுக.

**7.** (i) பௌத்தத்திற்கு முந்திய இலங்கையில் பெரிதும் நிலவியிருந்த தேசிய நம்பிக்கைகள், விசுவாசங்கள் பற்றி போதுமானதொரு கருத்துரை தருக.

(ii) துட்டகைமுனு மன்னனின் தேசிய மற்றும் சமயப் பணிகளை மதிப்பிடுக.

(iii) பர்மாவில் புத்தசமய வளர்ச்சிக்கு அந்த நாட்டு மன்னர்களிடமிருந்து கிடைத்த ஆதரவினை **இரண்டு** உதாரணங்களுடன் தெளிவுபடுத்துக.

(iv) சீன கலாசாரத்தின் போஷணைக்குப் புத்தசமயம் உதவியவகையினைப் பரிசீலிக்குக.

**8.** (i) கிறீஸ்து சகாப்தம் ஆரம்பமாவதற்கு முன்னர் புத்தர் சிலை நிர்மாணிக்கப்படாமைக்குக் காரணமாயமைந்தவற்றை எடுத்துக் காட்டுக.

(ii) பௌத்த ஸ்தூபி நிர்மாணமானது புத்தர் காலத்திலேயே ஆரம்பமாகிவிட்டது என்பதற்கான ஆதாரங்களை எடுத்துக்காட்டுவதுடன், சாஞ்சி ஸ்தூபத்தின் மூல வடிவத்தினைச் சுட்டிக்காட்டுக.

(iii) "புண்ணியம், பாவம் பற்றிய பௌத்த போதனையை சமூகமயப்படுத்தும் ஒரு ஊடகமாக விகாரை ஓவியக் கலை பயன்படுத்தப்பட்டுள்ளது" விமர்சிக்குக.

(iv) புத்த பக்தியை வளரப்பதற்கு புத்த குணங்களை அடிப்படையாகக் கொண்டு உருவான சிங்கள இலக்கியங்கள் எவ்வாறு காரணமாயின என்பதனை உரைநடை ஆக்கமொன்றினை ஆதாரமாகக் கொண்டு மதிப்பிடுக.

***

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk